உ

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன்பணிசெய்து கிடப்பதே

சைவ சித்தாந்தப் பெருமன்றத் திங்களிதழ்

மலர் 77	திருவள்ளுவர் ஆண்டு 2035 தாரண, வைகாசி - ஆனி; சூன் 2004	இதழ் 6



திரு.வி.க.

வெளியீடு:

தனி இதழ் ரூ. 10/-

சைவ சித்தாந்தப் பெருமன்றம்

4 (முதல் மாடி), வேங்கடேச அக்கிரகாரம் சாலை,
மயிலை, சென்னை – 600 004. தொலைபேசி – 2493 5109

பொதுப்பதிப்பாசிரியர் : பாம்பனார், வாரியார் அடிப்பொடி செ.வே. சதாநந்தன்
ஆசிரியர் : முனைவர் வை. இரத்தினசபாபதி
துணை ஆசிரியர் : முனைவர் சா. சரவணன்

பொருளடக்கம்

பெருமன்றத்தின் தேவார, இலவசப் பயிற்சி வகுப்புகள்

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் சார்பில் **திருமுறைக் காவலர் அ.சோமசுந்தரம் செட்டியார்** நிறுவியுள்ள கட்டிடவாரியத்தின் ஆதரவில் இலவசமாக நடத்தப்பெறும் தேவார இசைப்பயிற்சி வகுப்புகள் :

1. சென்னை, சைவ சித்தாந்தப் பெருமன்றத்தில் வாரந்தோறும் சனி, ஞாயிறு காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரை. ஆசிரியர். அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் ஓதுவார் திருக்களர் சிவத்திரு **நாகநாத ஓதுவார்.**
2. பூந்தமல்லி, பார்வையற்ற மகளிர் அரசு இல்லம் : வாரந்தோறும் சனி மாலை 3.00 முதல் 4.30 வரை, ஆசிரியர் புலவர் திரு. சு. பாலசுந்தரம்.
3. சென்னை, சைதாப்பேட்டை அன்னதானசமாசம் வித்தியாசாகர் நடுநிலைப்பள்ளி : வாரந்தோறும் இருமுறை. ஆசிரியை **பா. வள்ளி**
4. வட சென்னை டாக்டர் குருசாமி முதலியார் தொ.து.வே. மேனிலைப் பள்ளி – வாரந்தோறும் இரண்டு வகுப்புகள். ஆசிரியை **பா. வள்ளி.**
5. சென்னை, புரசைவாக்கம், கங்காதரீசுவரர் திருக்கோயில், வாரந்தோறும் இருமுறை; ஆசிரியர் சிவத்திரு. **எத்திராசு ஓதுவார்.**

திருமந்திரவகுப்பு

பெருமன்ற அலுவலகத்தில் வியாழக்கிழமை தோறும் மாலை 6.30 மணியளவில் **"திருமந்திரம்"** வகுப்பு நடைபெறும். ஆசிரியர் முனைவர் **வை. இரத்தினசபாபதி.** நல்லாதரவு–பொறியாளர் **கோவிந்தன்**அவர்கள்.

சாத்திரவகுப்பு

பெருமன்ற அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை தோறும் மாலை 6.30 மணியளவில் **'உண்மை விளக்கம்'** வகுப்பு நடைபெறும். ஆசிரியர் முனைவர் **வை. இரத்தினசபாபதி;** நல்லாதரவு – கட்டிட வாரியம்.

பெருமன்ற ஆண்டு உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 100/–
பெருமன்ற ஆயுள் உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 1000/–

(ஆண்டு உறுப்பினர் கட்டணம் என்பது சனவரி முதல் டிசம்பர் வரை)

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு
"அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே"
"அயரா அன்பின் அரன் கழல் செலுமே"

ஆசிரியர் : முனைவர் வை. இரத்தினசபாபதி

துணை ஆசிரியர் : முனைவர் சா. சரவணன்

மலர் 77	சூன் 2004	இதழ் 6

நால்வகை வாழ்வியல் நெறிகள்
(ஆசிரியர் உரை)

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே" என்பது அருளாளர் வாக்கு. வாழ்வியல் நெறியாயினும் வாழ்வியல் துறையாயினும் வாழ்வது நாம் தானே !

வாழ்வியல் நெறிவேறு; வாழ்வியல் துறைவேறு. வாழ்வியல் நெறிதான் வாழ்வியல் தத்துவம். வாழ்வியல் துறைதான் வாழ்நாளைச் செலுத்திக்கொண்டிருக்கும் செயற்பாட்டு முறை.

நாலுதல் என்றால் தொங்குதல் என்று ஒரு பொருள் உண்டு. இப்போதெல்லாம் தொங்கும் பாராளுமன்றம், தொங்கும் சட்டசபை என்றெல்லாம் செய்திகள் வருகின்ற காரணத்தால் தொங்கும் வாழ்வியல் நெறிகள் என்று கணக்கிட்டுவிடக் கூடாது.

நால்வகை நெறிகள் என்பவை ஒரு வகைப் கணிப்பு முறை. நம்மை நாமே எந்த இடத்தில் நிற்கிறோம் என்று கணக்கிட்டுக் கொள்ளலாம். கணினிக் கணிப்பு முறையானது இக்காலத்தே பெருகி வருவதால், பிறரால் நாம் அல்லது நம் வாழ்க்கையானது கணிக்கப் பெறுவதைவிட, நம்மை நாமே மதிப்பீடு செய்து கொள்ள முடியும்.

1. சட்டம்
2. நீதி
3. அறம்
4. அருள்

என நால்வகையான வாழ்வியல் நெறிகள் உண்டு. இவற்றில் எந்த இடத்தில் நாம் நிற்கிறோம் என்பதை நாமே கணித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

மேலே குறிப்பிடப் பெற்ற நான்கும் ஒன்றோடு ஒன்று மாறுபட்டவை அல்ல; படிமுறை வாழ்க்கை நெறிகளாக நாம் அவற்றை எண்ணவும் மதிக்கவும் ஆய்வியலில் அமைத்துக் காணவும் வேண்டும்.

1
சட்டம்

சட்டம் என்பது மக்களாய்ப் பிறந்தோரின் வாழ்வியல் நெறிமுறை. தனிமனிதனைப் பல்வேறு நிலைகளில் கட்டுப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது.

காலம், கடமை, சூழ்நிலை என்ற மூன்றும் வெளிப்படையாக நின்று தனிமனிதனை இயங்கவும், இயக்கவும் வல்லதாகச் செயற்படுத்தும்.

தனிமனித வாழ்வில் பல கோணங்களில் நின்று அவனைக் கட்டுப்படுத்தும். இதன் தோற்றம் வேதகாலம் முதல் என்பதாகவும் வரையறுத்தவன் இறைவன் என்றும் ஆன்றோர்களால் அவ்வப்போது விளக்கப் பெறும். சட்டமன்றம் நீதிமன்றம் ஆகியவைகளை ஆட்டிப்படைப்பது இதுவே.

தனிமனிதன் தனக்கு இருப்பதாகக் கற்பனை காணும் சுதந்தரம் எனப்பெறும் தனியுரிமையைக் கேள்விக் குறியாக்கி, அவனை ஓர் அடிமை என்பதாக இனங் கண்டு உணர்த்தும் ஆற்றல் இதற்கு உண்டு.

'சட்டம்' தனிமனிதனைக் கட்டுப்படுத்தும், குடும்பம், இனம், சாதி, குலம் என மெல்ல மெல்ல முன்னேறி, தனி மனிதனைக் கட்டுப்படுத்தும். குடும்பம் முதலிய அனைத்துப் பிரிவுகளாலும் வரையறை செய்யப் பெற்ற சட்டங்களை – மீறாமல் இணைத்துச் செயற்படுத்த வேண்டும் என்பதுதான் சட்டத்தின் வல்லமை.

எந்த ஒரு சட்டமும் தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கட்டுப்படுத்தும்; ஆனால் தன்னை அன்புடன் ஏற்றுச் செயற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தாது.

சட்டத்தின்படி நடக்கவில்லையானால் தண்டனை உண்டு. சட்டத்தின்படி நடந்தால் பரிசு என (Reward) எந்த ஒன்றும் கிடையாது. அவ்வாறே எந்த ஒரு சட்டத்தையும் அன்புடன் பின்பற்ற வேண்டும் என்ற நியதி கிடையாது.

வருமானவரி கட்ட வேண்டும் என்பது சட்டம். வாழ்நாள் முழுவதும் குறிப்பிட்ட காலத்தில் சட்டத்தை மதித்துக் கட்டி வந்தேன் என்பதற்காகப் பரிசு (Reward) எதுவும் கிடையாது.

வருமானவரியை அன்புடன் மகிழ்ந்து கட்ட வேண்டும் என்று கட்டுப்படுத்தாது.

சட்டத்தினால் மனிதன் கற்றுக் கொள்வன இரண்டு. ஒன்று : அச்சம் ; இரண்டு : மதிக்கற்பாடு.

விதித்தன செய்தல்; விலக்கியன ஒழிதல் என்ற இருபக்கங்களைக் கொண்ட ஒரு நாணயமாக நின்று தனிமனிதனை நாணய முடையவனாகஆக்கும். வாழ்வியல் முடிவில் **நல்லமனிதன்** என்ற பெயரைக் கொடுக்கும்.

சட்டப்படி நடப்பதில் ஓர் அற்புதம் உண்டு. தனிதனிதன் ஒருவன் தான் முறையாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு சட்டத்தைக் காப்பாற்றவே இன்னொரு சட்டத்தை உடைத்தெறிய முற்பட்டு விடுவான். இந்த இடத்தில் தோற்றம் கொள்வதுதான் **வழக்கு.**

ஒரு தனிமனிதன் தனக்காகவும் குடும்பத்துக்காகவும் சாதிக்காகவும், இனத்துக்காகவும், மொழிக்காகவும், சார்ந்த சமயத்துக்காகவும், சமுதாயத்துக்காகவும் மொத்தம் எத்தனைச் சட்டங்களைப் பின்பற்ற வேண்டும் என்று ஒரு கணக்குக் கேட்டால். அது அவனுக்கே தெரியாது. வாழ்க்கையில் அவ்வப்போது எதிர்ப்படும் சட்டங்களை வளைக்காமல் ஒடிக்காமல் வளைந்து தெளிந்து வாழ்ந்து விடுதல் வேண்டும் அவ்வளவே தனிமனிதனுக்கும் சட்டங்களுக்கும் இடை உள்ள உறவு.

ஓரறிவு உயிர் முதல் ஐந்தறிவு உயிர் உரையில் பல்வேறு பிறப்புகளில் உழன்று திரிந்து இந்த ஆன்மாவானது பெறும் பயிற்சியானது சட்டத்துக்கு அடிபணிதல் என்பதே.

ஆறாவது அறிவு உடைய அறிவுஜீவிப்பிறப்பில் மனிதனாக வந்தபோதுதான் பல்வேறு சட்டங்களை அலசுகிற மதிநுட்பமும், செயல்திறனும் அதே சமயம் உடைக்கும் மறைமுக வலிமையும், சட்டங்களின் வலிமையுடன் ஆழமான பொருள் நுட்பத்தையும் உணர ஆரம்பிக்கிறான் அந்த மனிதன்.

2. நீதி

சட்டத்தை – அதன் நுட்பத்தை. அதன் வலிமையை – அதன் ஆழ்ந்த பொருள் திறனை உணர்ந்த போது அவன் இரண்டாம் நிலையாகிய நீதிப்படியில் அடிவைக்கத் தயாராகிறான்.

சட்டம் வேறு; நீதி வேறு. சட்டம் ஆற்று ஒழுக்கைப் போன்றது. 'நீதி' என்பது மேல் நோக்கிச் செல்லும் நீரோட்டம் போன்றது.

சட்டமானது நேர்முகமாகவும், எதிர்மறைமுகமாகவும் வகுக்கப் பெற்ற செயல்முறைப்பாடுகள். அவை அனைத்தும் (Positive Science) இயல்நிலை விஞ்ஞானம் எனப்பெறும். சட்டத்திலிருந்து மேல்நிலைப் படுத்தப் பெறும் செயல்முறைகளே நீதி. நீதியானது (Normative Science) எனப்பெறும். குறிக்கோளை நோக்கிய மனிதனை அந்நிலைக்கு உயர்த்தும் வல்லமையுடைய செயலே **'நீதி'** எனப்பெறும்.

'நீதியால் வாழ மாட்டேன் நித்தலும்,
தூயேனல்லேன்
ஓதியும் உணரமாட்டேன்; உன்னை உள்
வைக்கமாட்டேன்'

என்றார் அப்பரடிகள்.

சட்டம் என்பது நீதியாக மாறும் போது அதனுள் ஐவகைச் செயல்கள் அமைகின்றன.

1. செய்வது	இவை சட்டத்துள்
2. தவிர்வது	அடங்கும்
3. பெறுவது	
4. உறுவது	
5. உய்வது	

பெறுவதும், உறுவதும், உய்வதும் ஆகிய மூன்று புதிய உறுப்புகளை உட்கொள்ளும்போது சட்டமே நீதியாக அமைகிறது. மனிதன் மேல் நோக்கி உயர்கிறான்.

சட்டத்தை மதித்து நடக்க மட்டுமே கற்றுக் கொண்ட மனிதன் 'நல்லவன்' எனப் பெற்றான். அவனே நீதியில் அடிவைக்கும் போது அவன் தன்னளவில் 'தூயன்' ஆகிறான். பாசம் என்ற அழுக்கு, பொறாமை என்ற அழுக்கு, தன்னலம் என்ற மாறாப் பேரழுக்கு, இவை மூன்றையும் தன்னுள் அடக்கிய 'ஆணவம்' அவனை விட்டு அகலுகின்றது.

நீதியால் செயற்படும் போது அவன் தன்னளவில் சான்றோன் ஆகிறான். நீதியால் செயலாற்ற முற்படும் போது அவன் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்தன் தாக்கம் அவனிடம் அனுபவப்படுகிறது. நீதியானது தனிமனிதனுக்கு ஐவகை அனுபவத்தை வழங்கி, அவனைச் செயற்படுத்துகிறது.

கட்டாயத்துக்காகச் சட்டத்துக்குப் பணிந்தவன் நீதியின் ஆணையை மனமுவந்து ஏற்றுக் கொள்கிறான்.

உலகம் என்ற பெரிய வட்டத்துள் தன்னை ஓர் உறுப்பினனாக இணைத்துக் கொண்டு, உலகத்துக்கு – உலக இயக்கத்துக்கு மையக் கேட்பாடாக விளங்கும் அறத்தின் ஆற்றலுடன் தன்னை இணைத்துக் கொள்கிறான். அப்போது அவன் வையத்துள் வாழ்வாங்கு வாழும் புனித மனிதனாகிறான். அதனாலேயே அவனைத் 'தூயன்' என்கிறார் அப்பரடிகள்.

நீதியில் நின்றபோது அந்த மனிதன் சட்ட வரையறைகளை வெறும் சட்டமாக மதிப்பதில்லை. சட்டத்தில் நின்ற போது 'சட்டம்' ஏன் என்று தெரியாமலேயே கற்பனையினால் சில விளக்கங்களைத் தானே

கூறிக் கொண்டிருந்தான். எந்த ஒரு சட்டப் பிரிவிலும் உறுவதும், பெறுவதும், உய்வதும் ஆகிய மூவகைப் பேறுகள் உண்டு என்று அவன் நீதிப் படியில் நிற்கும் போது அனுபவமாக உணர்கிறான். இப்போது அவன் சட்டத்தை உடைக்க முற்படுவதில்லை. பல்வேறு சட்டங்களையும் ஆரைக்கால்களாக அமைத்துக் கொண்டு. அறச்சக்கரம் ஒன்றை உருவாக்கி, அதன் மையப் பகுதியில் நிலையாக நின்று செயல்படுகிறான். இப்போது அறம் என்ற சக்கரம் அவன் காலடியில் நின்று சுழல்கிறது.

3. அறம்

அறம் என்ற சொல்லைக் கேட்டவுடன் அச்சம் கொள்ளுதல் கூடாது. தனக்கும் பிறருக்கும் உள்ள வரையறையைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும் என்பதே அறம்.

உலகம் இருவகை வேறுபாடுகளால் இயங்கவல்லது. அப்படி இயங்குவதுதான் உண்மை. இருமை வகைகளின் ஆழ்ந்த தத்துவ உண்மையை வரையறுத்துத் தெரிந்து கொள்வது தான் அறம்.

கணவன் மனைவி; தந்தை மகன்; தொழிலாளி முதலாளி; பொருள் இழப்பு – பொருள் சேகரிப்பு; ஆசிரியன் மாணாக்கன்; நோய் உடையவன் மருத்துவன் என்று இவ்வாறாக உலகம் இருமையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இருமையும் ஒத்த உரிமை உடையவை. இருமைகளும் உலகில் அன்று முதல் இன்று வரை நின்று நிலவுபவை.

கணவன் தன்னுடைய எல்லையையும் தன் மனைவியின் உரிமையையும் வரையறுத்துத் தெரிந்து கொள்வது என்பதே அறம்.

"இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு"

என்பது திருக்குறள்.

ஒரு தனிமனிதன் தன்னுடைய எல்லையை வரையறை செய்து கொண்டு, அந்த எல்லையை எந்த ஒரு கால கட்டத்திலும் தாண்டாதிருக்கப் பழக வேண்டும். அதே சமயத்தில் தன் எதிரில் உள்ளவர்களின் எல்லையையும் உரிமையையும் தெளிவாகத் தெரிந்து

கொள்ளுதல் வேண்டும். தெரிந்து கொண்டால் மட்டும் போதாது; அவர்களையும் அவரவர்களின் எல்லையில் உரிமையுடன் நிலைத்து நிற்கத் தொண்டாற்றுதல் வேண்டும்.

அறம் ஒரே பக்கத்தை உடையது அன்று. தன்முனையையும் எதிர் முனையையும் வரையறையுடன் அமைத்துக் கொண்ட பேராற்றலே அறம்.

தன் எல்லையையும் தன் எதிரில் உள்ள தன்னை ஒத்தவரின் எல்லையையும் வரையறுத்து உணர்பவனே அறவாளன். தான் தன் எல்லையில் மீறாமல் நின்றாலே மனித வாழ்வு செம்மையானது தான்; சால்புடையது தான். ஆனால், தன் எதிர்முனையில் உள்ளவனையும் அற எல்லையில் தவறாது – எல்லை மீறாது நிற்குமாறு செய்ய வேண்டும். அப்படிச் செய்தவனே ஆக்கும் சான்றோன்.

தன்னளவில் அற எல்லையில் மீறாது நின்றவன் **ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோன்.** அவன் புகழப்படுபவனே.

பட்டினத்துச் சாலையில் பிறர் மேல் மோதாது காரோட்டிச் செல்பவன் கலைவல்லவன்; ஆய்ந்தமைந்த செயற்பாட்டினன் தான். ஆனால் அது மட்டும் போதாது. தன்மேல் மோதவரும் எதிர்நிலைக் காரோட்டியையும் தத்தம் எல்லையில் தவறாது நிற்கச் செய்தால்தான் விபத்தைத்; தவிர்க்க முடியும். முடியும் என்பார் சிலர்; முடியாது என்பார் பலர். என்மேல் தவறில்லை என்று வாதிட்டால் போதுமா ?

தன்னை அறஎல்லையில் நிறுத்தி எதிர்முனையில் உள்ளவர்களையும் அவரவர்தம் எல்லையில் நிறுத்தி வாழ்ந்தவர்களும் உலகில் வரலாறு படைத்திருக்கிறார்களே ! அவர்கள் ஆக்கும் சான்றோர். இதற்குத் தேவை **'ஆன்மநேயம்'**.

ஒன்று தான். எதிர்முனையில் உள்ளவர்கள் எல்லை கடக்க முற்படும் போது, ஐயகோ, இவர்கள் நாளை துன்புறுவார்களே ! இவர்களை எல்லையில் நிறுத்துவதும் என் கடமை என உணர்ந்து ஆன்ம நேயம் கொண்டு பணியாற்றுதல் வேண்டும்.

ஒழுக்கத்துக்கு இரண்டு பகுதிகள் உண்டு. ஒழுகுதல் ஒழுக்கம்; பிறரை ஒழுக்குவதும் ஒழுக்கம்தான். ஒழுகு; ஒழுக்கு என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டது ஒழுக்கம்.

பிறன்மனை நோக்காத பேராண்மை; சான்றோர்க்கு
அறன் ஒன்றோ; ஆன்ற ஒழுக்கு

என்றார் திருவள்ளுவர்.

அறத்தில் இருமுனைச் செயற்பாடுகள் உண்டு. இருமையை வரையறுத்து உணர்தலும் செயற்படுதலும் வேண்டும்.

அமைந்த சான்றோனாய்
ஆக்கும் சான்றோனாய்

இருவகைகளையும் இணைத்து வாழ்ந்த முழுமைச் சான்றோனாய் வாழ்பவனே அறவாளன்.

சட்டத்தை மதித்து, நீதியை நோக்கி நடந்து, நீதியால் நினைந்து வாழ்ந்து தூயனாகி, பின் மூன்றாம் படியாகிய அறத்தை அடைந்து இருமுனைச் சான்றோனாக வாழ்ந்து அறவாளனாக நிற்றல் வேண்டும்.

4. அருள்

அருள் என்பது திருவாரூர்த் தியாகேசனுக்கே உரிய ஓராழித்தேர். அனைத்துயிர்களையும்; அவைகளின் செயல்திறன், ஞானத்திறன், ஊக்கத்திறன் ஆகிய மூவகைத் திறன்களையும் அறவழியில் இயக்கியும் நிறுத்தியும் செயற்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது.

சட்டம், நீதி, அறம் என்ற மூவகைப் படிநிலைகளில் முறையாகக் கடந்து வந்தால் அருள் நிலையாகிய படியில் ஏறுதலும் நிலைத்து நிற்றலும் கைகூடும்.

இதுவே அனைத்துயிர்களுக்கும் அருள்தாங்கி நிற்கும் நிலை. இந்நிலை கைவரப் பெற்றவர்களே அந்தணர்

"அந்தணர் என்போர் அறவோர்; மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்"

என இலக்கணம் கூறினார் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் எடுத்துக் காட்டிய இலக்கணத்துக்கு இலக்கியமாக வாழ்ந்தவர் யாவரேனும் உளரா என வினா எழுதல் இயல்பே.

திருவள்ளுவர் எடுத்துக் காட்டும் நீத்தார் பெருமையை இலக்கணமாகக் கொண்டு திருத்தொண்டர் புராணத்துள் வரும் அடியவர்கள் பலரை இலக்கியமாகக் கொண்டு தெளியலாம்.

எனினும், கீழ்வரும் சேக்கிழார் திருவாக்கின் வண்ணம் ஓர் அந்தணரை எடுத்துக் காட்டுதல் இவ்விடத்துக்கு ஏற்புடையதாக அமையும்.

"தம்பியார் உளராக வேண்டும்
என வைத்த தயா
உம்பர் உலகு அணைய உறு
நிலை விலக்க உயிர் தாங்கி
அம்பொன் மணிநூல் தாங்காது
அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி
இம்பர்மனைத் தவம் புரிந்து
திலகவதியார் இருந்தார்"

என்பது திருத்தொண்டர் புராணம் (பெரியபுராணம்) 1304 ஆம் திருப்பாடல்.

'அம்பொன்மணி நூல் தாங்காது' என்பதற்கு தம் இனத்து மக்கள், சைவ மக்கள், பிற இனத்து மக்கள், பிற சமயத்து மக்கள், சமயம் சாரா உயிர்கள் என வேறுபாடு (நூல்) காட்டாமல் அனைத்து உயிர்களுக்கும் அருள் தாங்கித் தவம்புரிந்த திலகவதி அம்மையார் ஒரு சிறந்த இலக்கியமாகத் திகழ்ந்தார் என்று கொள்ளலாம்.

சட்டத்தை மதித்துக் கீழ்ப்படிய வேண்டும்
நீதியை, நீதியால் உணர்தல் வேண்டும்.
அறத்தால் அறத்தின் எல்லையை உணர்ந்து
தெளிதல் வேண்டும்.
அருளால் அந்தணராதல் வேண்டும்.

மேலே குறிப்பிடப் பெற்ற நால்வகைப் படிகளில் நீங்கள் எந்தப் படியில் நிற்கிறீர்கள் என்பதை நீங்களே வரையறை செய்து பார்த்துக் கொள்ளலாம். இது ஒருவகை வாழ்வியல் தற்சோதனை.

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்"

பேராசிரியர் முனைவர். வெ. கனகசுந்தரம் அம்மையார்,
துணைத் தலைவர் பெருமன்றம்

அருளொடுகூடிய சிவபரம் பொருளே திரு; திரு – பெறத்தக்க செல்வமாகும். பெறத்தக்க செல்வத்தைப் பெறுதற்கு அடியார்கள் நாடி அதை அடைந்தனர். அடைந்ததன் பயனாய் அவர்கள் நிலையான இன்பத்தை அனுபவித்தனர். அவ்வாறு அனுபவித்த இன்பம் அவர்கள் உள்ளத்தினின்றும் தோத்திரப் பாடல்களாக ஊற்றெடுத்தது. அஃது ஆறாய் சலசலத்து ஓடியது; அருவியாய் – பெருவெள்ளமாய்த் தமிழ் நாடெங்கும் 2 ஆம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை பரவி ஓடியது.

அத்தோத்திரப் பாடல்களை அருளிச் செய்தவர்கள் திருஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் பெருமான் வரை உள்ள இருபத்தேழு அருளாசிரியர்கள் ஆவர். ஆம் ! அவை தமிழரசர் வேண்டுகோளின்படி பன்னிரண்டாக வகுக்கப் பெற்றுத் தொகுக்கப்பட்டன. அத்தொகையே பன்னிரு திருமுறை என்னும் பொருள் கொண்டு நிற்கின்றது. திருமுறை என்பது நிலையாய செல்வத்தை மக்கள் எளிதாக அடைதற்கு வழிகாட்டும் நூல்.

திருஞான சம்பந்தர் காலந் தொடங்கியே வேறு வேறு சமய நிலை பாடுகளுக்கிடையில் நிறுவன முறையிலான சைவ சமய நிலை பேற்றிற்கான சூழலும், தேவையும் எழுந்தன. எழுந்தமையால் சமயக் கோட்பாடுகள் பற்றியும் சிந்திப்பதற்கான நிலை அன்று தொடங்கி ஏற்பட்டது எனலாம்.

சேக்கிழார் செயற்கரிய செய்த சிவனடியார்களின் வரலாற்றினை ஆர்வமிக விரித்துரைத்தவர்.

"தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதம் போற்றி"

ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி"

பெரியர் புராணம் என்பது பெரிய புராணம் என வழங்குகின்றது.

இதற்கு ஆசிரியர் இட்ட பெயர் **திருத்தொண்டர் புராணம்** என்பதாகும். இதன் ஆசிரியர் தெய்வச் சேக்கிழார் பெருமானார்.

பெரியபுராணம் அரும்பெரு ஞான நூல். இப்புராணத்தின் பயனாவது மக்களின் சிந்தையிருள் போக்கி ஞான வெளி தந்து இகத்தும் பரத்தும் இன்பமளித்துப் பேரின்ப முத்தி உதவுதலேயாம்.

இது ஒரு ஞான நூல் என்று சொன்னோம். திருஞான சம்பந்த சுவாமிகள் புராணத்தில் இக்கூற்றுக்கு முத்திரை குத்தப் பெற்றுள்ளது. பாருங்கள் :

"மண்ணினிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுது செய் வித்தல்
கண்ணி னால் அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வரு கென" உரைப்பார். – 1087

அதே போல பின்னும் ஓர் இடத்தில் அப்புராணத்தில்,

"ஞானமெய்ந் நெறிதான் **யார்க்கு நமச்சிவா யச் சொலாம்**" என்
றானசீர் நமச்சி வாயத் திருப்பதி கத்தை அங்கண்
வானமும் நிலனும் கேட்க அருள் செய்(து) "இம் மணத்தில் வந்தோர்
ஈன மாம் பிறவி தீர யாவரும் புகுக" என்ன

என்று வருவதைக் கூர்ந்து நோக்கலாம். (திருத். 1248)

காலந் தோறும் இயக்கங்கள் பெருகி வருகின்றன. இயக்கங்கள் என்றாலே ஒரு கவர்ச்சியும் உண்டு. பழமையை அடியோடு மாற்றுவது; புதுமை காண்பது இவ்வியக்கங்களின் அடிப்படை நோக்கம் என்று சொல்லிக் கொள்வர். அதுவே பெரும் புரட்சி என்றும் பறை சாற்றிக் கொள்ளுவர். தமிழிலக்கிய வரலாற்றிற் சேக்கிழார் சாதனை என்ன என்பது தெளிய வேண்டிய வொன்று.சமய நிலையில் பார்க்கினும் அவரது சாதனையை அவ்வளவு எளிதாக முடிவு கட்டிவிட முடியாது. சீவகசிந்தாமணிக்குப் போட்டியாக எழுந்ததே பெரியபுராணம் என்று கூறப்படுகிறது.

சேக்கிழார் செய்தது தான் என்ன ?

1. சேக்கிழார் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரரின் திருத்தொண்டத் தொகையையும், பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியையும் ப்ன்பற்றியே பெரிய புராண நூலை யாத்துள்ளதாகக் கூறுவர்.

2. சுந்தரரின் திருத்தொண்டத் தொகையில் நாயன்மார் பற்றி மிகச் சிறிய குறிப்பே இடம் பெற்றுள்ளது. நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டத் தொகையை விரித்துப் பாடியதாகும். சமண பௌத்தங்களின் வீறு அடங்கிச் சைவத்தை மறுமலர்ச்சியுறச் செய்த அடியார்களின் வாழ்க்கை வரலாறு காலப் போக்கில் வளர்ந்து சென்றிருக்கலாம் என்று கூறுவர் காலமும் கருத்தும் பற்றிச் சிந்திக்கின்றவர். (டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், III 1985, பாரிப் புத்தகப் பண்ணை, சென்னை . ப. 131)

3. சுந்தரர் காலத்தில் நாயன்மார் வாழ்க்கை பற்றிய அற்புதக் கதைகள் சில, மக்களிடையே வழங்கியிருக்கின்றன. சுந்தரர் அவற்றைத் தம் பாடல்களில் அமைத்தார். மூவர் விக்கிரகங்கள் கோவில்களில் அமைத்துப் பூசிக்கப்பட்டு விழா எடுக்கப்பட்ட காலத்தில் நம்பியாண்டார் நம்பிகள் சுந்தரர் கூறியதோடு தம் திருமுறை ஆராய்ச்சியிற் புலப்பட்டதையும், எடுத்துரைத்தார். அதோடு தம் காலத்துப் பல்கிப் பெருகிய கதைகளையும் சேர்த்துக் கூறியுள்ளார்.

இவர்களைப் பின்பற்றியும் சோழப் பேரரசின் அமைச்சராகத் தமிழ்நாடு முழுவதுஞ் சென்று தாம் ஆராய்ந்து கண்ட செய்திகள் சிலவற்றைச் சேர்த்தும் தம் காலத்திற் புதிதாகக் கிளைத்திருந்த நாயன்மார் பற்றிய புதிய கதைகளைச் சேர்த்தும் சேக்கிழார் (பெரியபுராணம்) என்கிற காவியஞ் செய்திருக்கின்றார். (M.A. Dorai Rangaswami - The Religion and Philosophy of Tevaram - 945). இவ்வாறு சைவருடைய பக்தியியக்கம் பெரிய புராணத்திற் பூரணத்துவம் பெற்றது – முழுமை பெற்றது என அறிகின்றோம்.

“இந்த இடத்தில் ஒன்றை நாம் நினைவு கூர வேண்டும். தமிழ்நாட்டு வரலாற்றில் 'இயக்கம்' என்ற அமைப்பில் முதலில் இடம் பெறுவது பக்தி இயக்கமே ! புத்த, சமணக் கொள்கைகளைப் புறம் கண்டு தமிழ்ப் பண்பாட்டை நிறுவ ஏறக்குறைய 6 ஆம் நூற்றாண்டில் இந்தப் பக்தி இயக்கம் செய்த புரட்சிகள் எத்தனையோ ! இப்பக்தி இயக்கத்தில் சைவ சமயத்தின் பங்கு அளவில்லாதது. இவ் இயக்கத்தில் அன்று ஏராளமான தொண்டர்கள் சேர்ந்தனர். இவ் இயக்கம் தூய்மையானது; வன்முறையில்லாதது.

அப்பர் பெருமான்.

'புனிதன் தமர் குழு' (5–91–4)

என்று இவ் இயக்கத்தைக் குறிப்பிட்டுப் பாடினார். சேக்கிழார்.

'புனிதர் பேரவை' (பெரியபுரா. பாடல் 4)

என்று இரு பொருள் பட நயமாகக் குறித்தார்.

இன்றைய இயக்கங்கள் தம்முடைய கொள்கைகளாகக் கூறிக் கொள்ளும் உலக ஒருமைப்பாடு, மக்கள் நேயம், சமுதாயப் புரட்சி, மொழியுணர்ச்சி போன்ற எல்லாத் துறைகளிலும் நம் சைவ சமயம் கருத்தைச் செலுத்தியுள்ளது. (சித்தாந்தம், 1988 செப்டம்பர் புதுவை மாநகரில் 1988 பெருமன்றம் நடத்திய 82 ஆம் ஆண்டு விழா சைவ இளைஞர் மாநாட்டுத் தலைமையுரையில் பேராசிரியர் அ. பாலறாவாயன் கூறியவை)

சேக்கிழாரின் பெரிய புராணம் மக்களிடையேயும், அறிஞர்களிடையேயும் தனிப்பட்ட உணர்வை ஏற்படுத்தியது. அன்னார் தம் நூலிலே பக்திச் சுவைபடப் பாடிய பத்திமைப் பாக்களின் விளைவாகவே சிவனடியார்களுக்கு மதிப்புத் தருவது மிகப் பெரும் உயர்வை அடைந்தது. “தமிழ்ச் சைவ உலகில் சிவனடியார் வணக்கத்திற்கு நிரந்தரமான இடம் அளித்தது பெரிய புராணமே. சேக்கிழாரின் நூலின் விளைவாகச் சிவனடியார் வாழ்வில் மக்கள் தனிப்பட்ட ஆர்வம் கொண்டனர். இதன் மூலம் நாயன்மார்களின்

பாடலிலும் ஆர்வம் சென்றது. தமிழ்ச் சைவ உலகிற்குச் சேக்கிழார் அவர்கள் அளித்த மகத்தான பங்கு இது. (டாக்டர் கோ. சுந்தரமூர்த்தி, சைவ சமயம் (தமிழ்மரபை ஒட்டியது) சர்வோதய இலக்கியப் பண்ணை மதுரை, 1977 .ப 123)

சேக்கிழார் சிவபெருமானின் மீது மிகவும் பற்றுடையவராக இருந்தாலும், மற்றைச் சிவனடியார்கள் போல, பக்திப் பாடல்களை இயற்ற விரும்பவில்லை. சிவ பெருமானை நேரிடையாகப் புகழ்வதற்குப் பதில் சிவனடியார்களைப் புகழ்வதன் மூலம் சிவபெருமானைப் புகழ நினைத்தார். வழக்கமான பக்திப் பாடல்களைச் சேக்கிழாரும் எழுதியிருந்தால், இன்று போற்றப்படும் அளவிற்கு அவர் போற்றப்பட்டிருக்க மாட்டார். சிவனடியார்களின் வாழ்க்கையைப் பாடியதன் மூலம் சேக்கிழார் தமிழ்ச் சைவத்திற்கு மறக்க முடியாத தொண்டாற்றியிருக்கிறார். இந்நூலை எழுதியதால் சேக்கிழார் சைவ சமயத்தைச் சாதாரண மக்களுக்குப் புரியும்படிச் செய்து விட்டார். சேக்கிழாரின் பெரியபுராணம் காரணமாகவே இன்று சைவ சமயம் தமிழகத்தில் இந்த அளவிற்குப் பரவி உள்ளது. சைவ சமயத்தின் பிழிவைச் சேக்கிழார் தன் சிவனடியார் வரலாறு மூலம் கொடுத்து விட்டார். (கோ. சுந்தரமூர்த்தி,சைவ சமயம், ப. 119)

இவ்வருள் நூலின் உள்ளுறை பொருள் ஒன்று "இறைவன்", மற்றொன்று "தொண்டு". இவ்விரண்டின் துணையால் உலகோர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வான்உறையும் தெய்வமாகலாம். காப்பியங்கள் யாவும் அறங்கள், ஒழுக்கங்களையே வற்புறுத்தும்; கடவுட்பற்றையும் ஊட்டும். ஆனால், இவற்றைச் சேக்கிழார் வற்புறுத்துவதுடன் "பிறவியின் குறிக்கோள் இறைவன் பால் பத்திமை செய்தலே" "அவனை அடையும் வழி மன்பதைத் தொண்டு செய்தலே" என்றும் இந்நூலில் பெரிதும் வற்புறுத்துகின்றார். (மறை. திருநாவுக்கரசு, பெரியபுராண ஆய்வுரை, முன்னுரை)

சமய உணர்வு பெற்ற சான்றோர்கள் இறைவனைப் பல கோணங்களில் கண்டு பாடிய பாக்களைப் படிக்கும் போது, படிப்பவர் உள்ளத்திலும் பக்திச் சுவை பெருக்கெடுத்தோடுதல் திண்ணம். சேக்கிழார் சிவனடியார்களின் வரலாற்றினைப் பாடினார் ஆதலின், அவர் நூலில் தெய்வமணம் கமழ்வது இயல்பேயாம்.

நூலின் தொடக்கத்திலேயே தெய்வ மணம் கமழ்வதை நுகர முடிகின்றது. நூலின் தொடக்கமாகிய 'திருமலைச் சிறப்பு' என்னும் பகுதியில் கயிலை மலையைப் புனைந்து பாடுகின்றார். அவ்வாறு புனைந்து பாடும் முதற்பாட்டிலே மலையானது மாதொரு பாகனாரின் திருநீறுபூசிய கோலத்தை ஒத்துள்ளது என்று பாடுகின்றார்.

"பொன்னின் வெண்திரு நீறுபுனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது" (திருமலை 1)

திங்கள் முடிசூடும் மலையிலிருந்து ஓடி வருதலால், காவிரி சிவபெருமான் முடியிலிருந்து ஓடிவரும் கங்கையை ஒக்கும். காவிரி தான் கவர்ந்து வரும் மலர்களால் இருகரையிலுமுள்ள சிவன் கோயில்களை வழிபட்டு வேண்டிக் கொள்வதனாலே, சிவனடியாரை ஒத்துக் காணப்படுகிறதாம்.

'அண்ணல் வீற்றிருக்கப் பெற்ற தாதலின்
நண்ணும் மூன்றுல குந்நான் மறைகளும்
எண்ணில் மாதவஞ் செய்யவந் தெய்திய
புண்ணியந் திரண் டுள்ளது போல்வது' (திருமலை)

என்னும் பாடலைப் பாருங்கள் ! தொடர்ந்து வரும் 12 பாடல்கள் மட்டுமே போதும் சேக்கிழாரின் பத்திமையைப் பறை சாற்றுதற்கு எனலாம். ஏனெனில் அவர் தெய்வச் சேக்கிழார் பெருமான். அவர் செப்பலுற்ற பொருள் மிக்க சிறப்புடையது என்பது உண்மை தானே ?

தொண்டர்களின் சரித்திரம் பக்தியியக்கத்தை வளர்க்கப் பெரிதும் உதவியது. சுந்தரருடைய திருத்தொண்டத் தொகை மற்றைத் தேவார திருவாசகங்களில்லாத தொண்டர் துதி என்ற புதுவகுப்பு ஒன்றைச் சிருட்டி செய்கிறது. தொண்டர் குரு லிங்க சங்கமங்களைச் சிவனாகப் பாவித்து வழிபடுதலும், அம் மூன்றிலும் சிவன் வெளிப்பட்டு நின்று பூசை வழிபாடுகளை ஏற்று அவருக்கு அருள் செய்தலும் சைவ சித்தாந்தக் கருத்துக்களாகும். அவ்வாறு வழிபடும் தொண்டர்களையே திருத்தொண்டத் தொகையில் துதிக்கின்றார் சுந்தரர்.

பல்லவர் காலச் சைவ வைணவ எழுச்சியால், குன்றுதலுற்ற சமண பௌத்த மதங்கள், சோழப் பெரு மன்னர்களின் பரந்த

மனப்பான்மை காரணமாக மீளவும் தலையெடுக்கலுற்றன. அவற்றின் வளர்ச்சியைத் தடை செய்து சைவம் பெற்றுவிட்ட வெற்றியை நிலைநிறுத்த வட இந்தியாவில் முன்பு புராணங்கள் தோன்றியது போலத் தமிழ்நாட்டிலும் சோழர் காலத்திலே, புராணங்கள் சில தோன்றின. சோழர் காலப் புராணங்களுள்ளே தனிச் சிறப்புக்கள் சிலவற்றை உடையதாகச் சேக்கிழார் பெருமானின் பெரியபுராணம் விளங்குகின்றது.

இதனுள் பேசப் பெறும் அடியார் தமிழகத்து மக்களே ! பல ஊரினர், பல பிரிவினர், பல்வேறு தொழிலினர், பல்வேறு மரபினர்.

"ஒ்ருலகோ ? வொருதிசையோ வொருபதியோ ? தம்மில்
ஒரு மரபோ ? வொருபெயரோ ? வொருகாலந்தானோ ?
பேருலகி லொருமை நெறி தருங்கதையோ ? பன்மைப்
பெருங்கதையோ ? பேரொன்றோ ? வல்லவே ! யிதனை
ஏர் 'உலகெலாமுணர்ந்தோற் கரியவன்' னென்
றிறைவர்முத லடியெடுத்துக் கொடுத்தருளக் கொண்டு
பாருலகி னாமகணின் றெடுத்துக்கை நீட்டப்
பாடிமுடித் தனர் தொண்டர் சீர் பரவ வல்லார்." 40

என்று பாராட்டுகின்றார் உமாபதி சிவாசாரியார். திருத்தொண்டர் புராணவரலாறு என்று பெயரிட்டு 93 திருப்பாட்டுக்களால் சேக்கிழார் நாயனாரது சரிதத்தையும், அவர் நடராசர் திருவருட்டுணை கொண்டு பெரியபுராணம் பாடியரங்கேற்றிய வரலாறுகளையும் ஒரு தனிப் புராணமாக இயற்றியருளினார் 13–வது நூற்றாண்டளவில் வாழ்ந்த உமாபதி சிவாசாரியார் – (CKS)

ஆகலின் பெரியபுராணம் சமய இலக்கியமாக அமைவதோடு மக்கள் இலக்கியமாகவும் மிளிர்கிறது. பக்தி நெறியான் சமுதாயம் ஒருமை பெற்றொளிர வகைசெய்வது இக்காப்பியம். பெரியபுராணத்தைத் தொடர்நிலைச் செய்யுளாய் – ஒரு பழஞ்சரிதத்தைச் சொல்வதாய் ஒரு பெரிய உள்ளீடாகிய கற்பனையை எடுத்துக்காட்டுவதாயுள்ள ஒரு பெருங்காவியமேயாகும் என்பர் சி.கே. சுப்பிரமணிய முதலியார்.

ஒரிடத்தில் – காப்பியத் தொடக்கத்தில் மலைச்சிறப்புரைத்த ஆசிரியர் நாட்டுச் சிறப்பினைக் கூறுகின்றார். அப்போது சோழநாட்டின் வளத்தைப் பாடுகின்றார். வயலிலே நெற்பயிர் செழித்தோங்கி வளர்ந்து, கருவுற்று முதிர்ந்து பசலை கொண்டு அலர்ந்தன. அவை "அரனுக்கன்பர் ஆலின சிந்தை போன்றன" என்பர். முற்றிய நெற்கதிர் தலைசாய்த்து நன்கு விளைந்திருந்தது. அது சிவனடியார்கள் ஒருவர்க் கொருவர் கண்டு தலைவணங்குவது போன்றது என்பர் சேக்கிழார்.

"பத்தியின் பாலராகிப் பரமனுக் காளாம் அன்பர்
தத்தமில் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்
மொய்த்த நீள் பத்தி யின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி யெல்லாம்"

(திருநாட்டு 22)

என்னும் பாடலை நோக்குங்கள் !

இவ்வாறே தன்மை யாயினும், உவமை உருவகமாயினும், தற்குறிப் பேற்றம் முதலிய பிற எந்த அணிகளே யாயினும், ஆசிரியர் சேக்கிழாரின் கைப்பட்ட போது அவைகள் பக்திச் சுவையையே காட்டுவனவாம்.

"பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" என்று மகாவித்வான் திரு. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சேக்கிழார் பிள்ளைத் தமிழில் துதித்த இயல்பு நோக்கி இன்புறலாம்.

"தூயநீறு புனை தொண்டர்களென்ன"

"ஈர்ம்பொன்னி உம்பர் நாயகற் கன்பரு மொக்குமால்"

முதலிய தொடர்களையும் பக்திச்சுவை காணும் வகையில், காட்டும் வகையில் ஒளிர்வதைக் காணலாம்.

சேக்கிழார் பெரிய புராணமியற்றிய உள்ளுறையும் அவரது வாழ்க்கையின் உள்ளுறையும் சிவபக்தியடியார் பக்தியேயாதலின் உலகிலே காண்கின்ற அறிவுள்ள, அறிவில்லாத எப்பொருளும், எச்செயலும் அவர்முன் பக்திச் சுவை விளங்கும் பொருள்களாகவே காணப்படுகின்றன என்பர் சி.கே.சு. (சேக்கிழார் 142)

நம்பியாரூரர் பரவை நாச்சியானரக் கண்டு காமுற்று அவரைப் பிரிந்து வருந்தி மெலிகின்றார். அப்பிரிவின்கண் கடல், தண்மதி, தென்றலெல்லாம் வருந்துகின்றன. இந்நிலையில் சுந்தரர் தென்றலை நோக்கிக் கூறியதாக உள்ள பாடலொன்றைக் கேளுங்கள்.

"பிறந்த தெங்கள் பிரான் மலயத் திடைச்
சிறந்த ணைந்தது தெய்வநீர் நாட்டினில்
புறம்ப ணைத்தடம் பொங்கழல் வீசிட
மறம்ப யின்றதெங் கோதமிழ் மாருதம்" – தடுத்தாட் – 167

அவர் பாடுகின்றார். தமிழொடு பழகிய இனிய தென்றலே ! நீ பிறந்ததோ எங்கள் கண்ணுதற் பெருங் கடவுள் வீற்றிருக்கும் பொதிய மலை. பின்னர்த் தவழ்ந்து வந்து பழகிய இடமோ தெய்வத் தன்மை பொருந்திய சோழ நாட்டில் உள்ள தடாகங்கள். பிறந்த வீடும், புகுந்தவீடும் நல்லனவாயிருந்தலின் தண்மை, மணம் முதலிய தந்து நல்லன செய்ய வேண்டுவது நின் கடமை, அவ்வாறு இருக்கவும் தீத்தன்மை எய்தித் தீமைபுரிய யாங்குக் கற்றனை எனச் சுந்தரர் தென்றலை வினவுவர். இயற்கைத் தென்றலைத் தெய்வத் தென்றலாகவும் தமிழ்த் தென்றலாகவும் கொண்டு கூறிய இப்பாடல், இலக்கிய வனப்பெல்லாம் அமைந்த ஒரு பாடலாகும். (இரா. சாரங்கபாணி, இயற்கை விருந்து, பக் 94–95)

முடிவுரை : பக்தி நெறியான் சமுதாயம் ஒருமை பெற்றொளிர வகை செய்வது சேக்கிழாரின் பெரிய புராணம். தாழ் குலத்தாரும் தெய்வ அருள் பெறலாம்; பக்திப் பேரொளியின் முன், சாதி – நிற வேறுபாடுகள் மறையும்; பெண்டிரும் பக்தி செய்து முக்தி பெற்றனர். சைவம் செழிக்க – சிவநெறி தழைக்க வழி செய்கின்றது இந்நூல் அதோடன்றி, தேவாரத் திருமுறைகளில் பொதுளியுள்ள சைவக் கருத்துக்களை யெல்லாம் பாமரரும் இனிது உணரும் வகையில் எளிமைபட எடுத்தோதுகின்றது.

காவியச் சுவை, இயற்கை எழில், உவமையழகு, சொல்நயம், பொருள்வளம், அணி நலம், ஆற்றொழுக்கான நடை அனைத்தும் அமைந்த அரிய பனுவல். எச்சுவையினும் ஏற்றம் சான்றிருப்பது பக்திச் சுவையே ! (மது. ச. விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் I, ப. 259)

அன்பின் திறம் அறிய கண்ணப்பர் கதை ஒன்று போதும்.

'தத்தா நமர்' எனக்கூறி இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் மெய்ப்பொருள் நாயனார் புராணம் நெஞ்சை நெக்குருகச் செய்வது திருநீற்று மகிமையினால் !

சுந்தரர் பரவையாரைத் திருவாரூர்த் தியாகேசர் கோயிலில் கண்டு அதிசயித்துப் பாடிய "கற்பகத்தின் பூங்கொம்போ ? காமன்றன் பெருவாழ்வோ ?" என்று தொடங்கும் பாடல் முடிவில் "அற்புதமோ ? சிவனருளோ ? அறியேனென்று அதிசயித்தார்" என்று பாடுவது சேக்கிழாரின் பக்திப் பாங்கு தானே ?

இவ்வாறு தொட்ட தொட்ட இடமெல்லாம் பக்தியே மணக்கிறது. அதுவே அத்துணைபேர் வாழ்விலும் ஊடுருவி உயிர் நாடியாக விளங்குகின்றது. உலகின் எந்த மொழியிலும் இத்தகைய தொரு பக்திப் பெரும் பனுவலைப் பார்க்க முடியாது; இல்லவே இல்லை என்றும் உறுதியாகக் கூறலாம். எவ்வளவோ பேருடைய வரலாறும் வெவ்வேறு கோணத்தில் விளக்கப் படினும் முடிவில் மேலிடும் ஒரே ஒப்பற்ற உணர்வு பக்திப் பேருணர்வே என்பதுண்மை. திருத்தொண்டர் புராண நூலைப் படித்து முடித்ததும் பக்திப் பெருவெள்ளத்தில் முங்கி மூழ்கிப் புனிதம் பெற்ற நிறைநிலை நல்குவதை உணரலாம். வாழ்வுக்கு இந்நூல் ஒன்றே போதும் என்ற புத்துணர்வு பிறக்கிறது.

தலப் பயணம் : 14.6.2004

பெருமன்றத்தின் 98ஆம் ஆண்டு மாநாட்டு விழா திருக்கோவிலூரில் 13.6.2004 தேதியில் நிறைவான பிறகு, மறுநாள் 14.6.2004 தேதியில் காலை 6.30மணிக்குத் தலப்பயணம் திருக்கோவிலூர் ஸ்ரீ ஸ்ரீ குருராஜர் திருமண்டபத்தில் தொடங்கும். கீழ்க்கண்ட தலங்கள் தரிசிக்கப்படும்.

(1) அரகண்ட நல்லூர் (2) சித்தலிங்க மடம் (3) திருவிடையாறு (4) திருவெண்ணெய் நல்லூர் (5) திருமுண்டீச்சரம் (6) திருநாவலூர் (7) திருஆமூர் (8) திருவதிகை (9) சித்தவடம் (10) திருத்துறையூர் (11) விழுப்புரம்.

பேருந்துக் கட்டணம், காலை மற்றும் பகல் உணவு ஆகியவற்றிற்கு ஏற்படும் செலவுக்காக ரூ. 150/– ஐ தலப் பயணத்தில் கலந்து கொள்ளும் அன்பர்கள் செலுத்த வேண்டும். மேலும் விபரங்களுக்குக் கவிமாமணி உதியன், திருக்கோவிலூர் அவர்களுடன் மாநாட்டில் தொடர்பு கொள்ளவும்.

– பொதுச் செயலர்

2004. ஏப்ரல் திங்களில் நடைபெற்ற பெருமன்ற நிகழ்ச்சிகள்

1. அறுபத்து மூவர் விழா

3.4.2004 சனிக்கிழமை அன்று நடைபெற்ற திருமயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோவிலின் அறுபத்து மூவர் பெருவிழாவை முன்னிட்டுப் பெருமன்ற வளாகத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. தொடக்கத்தில் திரு. முருக. ஏழுமலை அவர்கள் திருமுறை இசை வழங்கினார். சுவாமிக்கு நிவேதனம் செய்யப்பட்டது. இந்த விழாவிற்குத் தலைவர் திரு. செ.வே. சதாநந்தன், துணைத் தலைவர்கள் திரு. முருகு. இராமலிங்கம், திருமதி முனைவர் வெ. கனகசுந்தரம், பொதுச் செயலாளர்திரு. கிருஷ்ணமூர்த்தி, பொருளாளர், திரு. க. கிருசுணன், செயற்குழு உறுப்பினர் திரு. எல். கே.முத்து மற்றும் பல உறுப்பினர்கள் வந்து சிறப்பித்தனர். சிறப்பு முகவராக டாக்டர் பி.ஆர். சுந்தர வடிவேலு மேனான், துணைத் தலைவர் ஸ்பிக் நிறுவனர் அவர்கள் அன்னதானத்திற்கு நல்லாதரவாக ரூ. 1000/– (ஓராயிரம்) மன்றத்திற்கு நன்கொடை வழங்கியதோடு அவர்களும் உடனிருந்து அன்னதானத்தில் பங்கேற்று, சிறப்புச் செய்தமை நன்றியோடு நினைக்கற்பாலது. அறக்கட்டளை நிறுவிய அன்பர்களுக்கும், விழாவிற்கு வந்திருந்து சிறப்பித் தோருக்கும் நன்றி கூறப்பட்டது.

அறக்கட்டளை நிறுவிய அன்பர்கள் :

சிதம்பரம் திரு. கே. ஞான சூரியன், திரு. என். சோமசுந்தரம் சென்னை – 20. யாழ்ப்பானம் திருமதி. திருமுனைவர் சு. விக்கினராசு, திரு. அருணகிரி பொன்னம்பலம் சகோதரர்கள், மேற்கு மாம்பலம், சென்னை – 33.

2. காரைக்கால் அம்மையார் விழா :

7.4.2004 புதன்கிழமை அன்று விழா நடைபெற்றது. அவ்வமயம் திரு. சு. பாலசுந்தர ஒதுவார் திருமுறை இசைவழங்கினார். தலைவர் செ.வே. சதாநந்தன் அவர்கள் தலைமை உரையும், துணைத் தலைவர் முனைவர் திருமதி. வெ. கனகசுந்தரம் அறிமுகஉரையும் வழங்கினார்கள்.

மயிலம் முனைவர் வேல்கார்த்திகேயன் "செந்தமிழ் நம்பி" அவர்கள், "அன்றே நின் திருஉருவம் காணாதே ஆட்பட்டேன்". என்னும் தலைப்பில் காரைக்கால் அம்மையார் இறைவனின் திரு உருவத்தின் காட்சியைக் காண ஒருமையுடன் உள்ளம் உருகிய ஒப்பற்ற நிலையை, அம்மையார் தன்னுடைய மூத்த திருப்பதிகத்தில் குறித்துள்ளதை எடுத்து விளக்கிச் சொற்பொழிவாற்றினார்கள். செயலர் சொற்பொழிவு நன்றி கூறி விழாவை நிறைவு செய்தார். அறக்கட்டளை நிறுவிய அன்பர்கள் : திரு. சுந்தரசாமி வளவனூர் கடலூர். திருமதி. சிவகாமி நடராஜன் சைதை செ – 15. திருமதி. சாந்தி தயாநிதி (மயிலை, சென்னை – 4, திருமதி சி.செ. விசாலாட்சி ஆற்காடு, திரு. அருணகிரி பொன்னம்பலம் சென்னை – 33.

3. பெரியபுராணத் தொடர் சொற் பொழிவு :

10.4.2004 சனிக்கிழமை அன்று நடைபெற்றது. திருமதி. பா. வள்ளி உமாபதி அவர்கள் திருமுறை இசை வழங்கினார்கள். பெரிய புராணத்தில் திருஞான சம்பந்தர் வரலாறு பற்றி முனைவர். கு. சுந்தரமூர்த்தி அவர்கள் சிறப்பாக விளக்கிச் சொற்பொழிவாற்றினார்கள். இடை இடையே பெரியபுராணத்தின் பெருமைகளையும் சேக்கிழார் பெருமானின் சொல்லாட்சியைத் திருக்குறளுடன் இணைத்து விளக்கி உரை செய்தார் செயலர் நன்றி கூறி விழாவை நிறைவு செய்தார்.

அறக்கட்டளை நல்லாதரவு : கயிலைப் புனிதர் டாக்டர் அ. மாணிக்கம் எம்.எஸ்., குரோம்பேட்டை, சென்னை – 44.

4. அறக்கட்டளை :

திருமுறை விண்ணப்பம் (மற்றும்) நாயன்மார் வழிபாட்டு விழா 24.4.2004 சனிக்கிழமை மாலை ஐந்து மணி அளவில் துணைத் தலைவர் திரு.முருகு. இராமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருஞான சம்பந்தரரின் மூன்றாம் திருமுறைப் பதிகங்கள் சுழல் முறையில் அன்பர்கள் விண்ணப்பம் செய்தனர். பிறகு முனையடுவார் நாயனார், காரைக்கால் அம்மையார், சிறுத்தொண்டர் நாயனார், மங்கையர்க்கரசியார் விறல் மிண்ட நாயனார் ஆகியோரின் வரலாறுகளை அன்பர்கள் ஓதி அவற்றிற்குரிய சில பாடல்களையும் மற்றும் வழிபாட்டிற்குரிய திருமுறை இசையையும் – திரு. முருக. ஏழுமலை

அவர்கள் வழங்கினார்கள். இறைமூர்த்தங்களுக்கு அர்ச்சனையும், வழிபாடும் நடைபெற்ற பிறகு அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. நாயன்மார்கள் வழிபாடு இனிதே நிறைவு செய்யப்பட்டது.

அறக்கட்டளை : திருவாளர்கள் : 1. டி. இராமசாமி முதலியார் 2. முருகு இராமலிங்கம் 3. கே.டி.கணேசன் 4. க.பொன்னுசாமி 5. பி.தியாகராசன் 6. அருணகிரி பொன்னம்பலம் 7. புரசை பாலசுப்பிரமணியம் 8. எஸ். இராசரத்தினம் 9. வீ. தட்சிணாமூர்த்தி 10. தி. சிவநேசன் 11. மா.க. தாண்டவமூர்த்தி 12. என். சிவராமகிருஷ்ணன் 13. முருக ஏழுமலை 14. அமுதா மாதவன்

நல் ஆதரவு : 1. கரூர் அண்ணாமலை பழநியப்பன் 2. மா. கோடிலிங்கம் 3. செல்வி இரகுபாய் 4. மு.ந. தணிகாசலம்.

5. அறக்கட்டளை விழா

மாதவச் சிவஞான சுவாமிகள் விழா 28.4.2004 புதன்கிழமை அன்று நடைபெற்றது. நிகழ்ச்சி நிரலில் குறித்தபடி முனைவர். அருணை பாலறாவாயன் வர இயலாத காரணத்தால் துணைத் தலைவர் முனைவர் திருமதி வெ. கனகசுந்தரம் அவர்கள் சிறப்புச் சொற் பொழிவாற்றினார்கள்.

“பதி இலக்கணமும் ஞான வழிபாடும்” என்னும் தலைப்பில் அம்மையார் அவர்கள் பல விளக்கங்களை மிக ஆழமாகவும் நுட்பமாகவும், விளக்கினார்கள். செயலர் நன்றி கூறி விழாவை நிறைவு செய்தார்கள்.

அறக்கட்டளை நிறுவிய அன்பர்கள் :

தெய்வத்திரு பாரி கௌரி சங்கரன், சென்னை – 33. திரு.கோ. ஏகாம்பர முதலியார், சென்னை – 40.

6. அறக்கட்டளை : நல்லாதரவு

தோத்திர நூலாகிய திருமந்திரத்திற்கும், சாத்திர நூலாகிய உண்மை விளக்கத்திற்கும் சித்தாந்த சரபம் பேராசிரியர் முனைவர் வை. இரத்தினசபாபதி அவர்கள் முறையே வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை தோறும் மிகச் சிறப்பான முறையில் விளக்கம் அளித்தார்கள்.

இம்மாதத்தில் மூன்று நாட்கள் திருமந்திரத்தில் ஆறாம் தந்திரம் வகுப்புகள் நடைபெற்றன. உண்மை விளக்கம் இரண்டு நாட்கள் நடைபெற்றன. செயலர் சொற்பொழிவு நன்றி கூறி நிறைவு செய்தார்கள்

நல்லாதரவு : திருமந்திரம் :– சிவத்திரு இரா. கோவிந்தன் எம்.இ., சென்னை – 40.

தெய்வத்திரு அ. சோமசுந்தரம் செட்டியார் உண்மை விளக்கம் :– கட்டிட வாரியம்.

நன்கொடை 1

சென்னை திருமழிசை சிவத்திரு பா. சம்பத் (ட.704) அவர்கள் தன் சீமந்தபுத்திரி திருநிறைச் செல்வி ச. மைதிலி, ச. ரவிக்குமார் அவர்களின் திருமணம் 23.2.2004 அன்று நடைபெற்றதற்குப் பொது நிதி நன்கொடையாக ரூ. 1000/– ஓராயிரம் மன்றத்திற்கு வழங்கியுள்ளார்.

நன்கொடை 2

சென்னை திருவொற்றியூர் சிவத்திரு என். மாணிக்கம், புரவலர் அவர்கள் பெருமன்றத்தின் கட்டிட நிதிக்காக ரூ. 5000/– ஐயாயிரம் நன்கொடை வழங்கியுள்ளார்கள்.

நன்கொடை 3

சிவத்திரு டாக்டர் பி.ஆர். சுந்தரவடிவேலு, (மேனான் துணைத் தலைவர் ஸ்பிக் நிறுவனம்) அவர்கள் 2004 ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற அறுபத்து மூவர் விழா அன்னதானத்திற்கு ரூபாய் 1000/– நன்கொடையாகவும், மேலும் ரூ.15,000/– தம்முடைய தகப்பனார் புதுப்பேட்டை திரு.இராஜபாதர் அவர்களின் நினைவு அறக்கட்டளையாகவும் வழங்கியுள்ளார்.

நன்கொடை 4

ஒவ்வொரு வருடமும் சனவரித் திங்களில் "சித்தாந்தம்" இதழ் வெளியிடுவதற்கான செலவைச் சிவத்திரு க. கிருசுணன், பெருமன்றப் பொருளாளர் அவர்களும் சிவத்திரு. பி.வி. சுப்ரமணியம், பெருமன்றச் செயலர் (நூலகம்) அவர்களும் இணைந்து ஏற்பதாகக் கடிதம் மூலம்அறிவித்தார்கள். இந்த அடிப்படையில் 2004 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் வெளியீட்டிற்காக சிவத்திரு.க. கிருசுணன் அவர்கள் ரூ.1500/–யும் சிவத்திரு.பி.வி. சுப்பிரமணியம் அவர்கள் ரூ. 1400/–யும் நன்கொடையாக வழங்கினார்கள்.

மேற்கண்ட நான்கு நன்கொடைவழங்கியவர்களுக்குப் பெருமன்றம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பொதுக்குழு கூட்டம்

26.6.04 தேதி மாலை 4.00 மணிக்கு

16.5.2004 தேதியில் பெருமன்றச் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்தவாறு பெருமன்றப் பொதுக்குழு கூட்டம் 2004 ஜீன் 26ஆம் தேதி சனிக்கிழமை மா்லை 4.00 மணிக்குப் பெருமன்ற அலுவலகத்தில் (4, முதல் மாடி வேங்கடேச அக்கிரகாரம் சாலை மயிலை, சென்னை – 600 004) நடைபெறும்.

பொதுக்குழு கூட்ட அறிவிப்பு

1. பொதுக்குழுவில் கீழ்க்கண்ட செய்திகள் விவாதிக்கப்படும்

அ. ஆண்டு அறிக்கையைப் பரிசீலித்தல், ஒப்புதல் அளித்தல்

ஆ. தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு வரவு, செலவு அறிவிக்கை (Statement), ஐந்தொகைக் குறிப்பு (Balance Sheet) முதலியவற்றை ஆய்தல், ஒப்புதல் அளித்தல்.

இ. உறுப்பினர்களின் தீர்மானங்களை விவாதித்தல், முடிவு செய்தல்.

A நூற்றாண்டு விழாச் சிறப்பாக நடைபெற ஆலோசனைகள் வழங்குதல்.

2)உறுப்பினர்கள் ஏதாவது தீர்மானத்தைக் கொண்டுவர எண்ணினால் அதைப் பற்றிய முழுவிவரத்தை எழுத்து மூலமாகப் பொதுச் செயலாளர் / செயலாளர் (சொற்பொழிவுகள்) அவர்களுக்கு பொதுக்குழு கூட்டம் நடைபெறுவதற்குக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்பாகவே) (10.6.2004 தேதிக்குள்) சேர்க்க வேண்டும்.குறித்த நாளுக்குள் மேற்கண்டவரிடம் தீர்மானத்தைச் சேர்ப்பிப்பது உறுப்பினரின் பொறுப்பாகும்.

B. குறித்த காலத்துக்கு மேல் அரைமணிக்குள் 25 உறுப்பினர்கள் வந்திருந்தாலன்றிக் கூட்டம் நடைபெறாது. அவ்வாறு நடைபெறாமல் தள்ளிவைக்கப்பட்ட பொதுக்குழுக் கூட்டம் 27ஆம் தேதியில் பெருமன்ற அலுவலகத்திலேயே மாலை 4.00 மணிக்கு வந்திருந்த உறுப்பினர்களைக் கொண்டே நடைபெறும்.

பொதுச் செயலாளர்
பெருமன்றம்

உ

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின்

98ஆம் ஆண்டு விழா மாநாடு - நிகழ்ச்சி நிரல்

இடம் : **ஸ்ரீ ஸ்ரீ குருராஜர் திருமண மண்டபம், கடலூர் மெயின் ரோடு, கீழையூர், திருக்கோவிலூர் – 605 757 விழுப்புரம் மாவட்டம். தொலைபேசி : 04153 – 253169**

நாள் : **12.6.2004 & 13.6.2004** (சனி மற்றும் ஞாயிறு)

(அன்பர்கள் பெயர்களுக்கு முன்பு "சிவத்திரு" என்றும் பெயர்களுக்குப் பின்பு 'அவர்கள்' என்றும் சேர்த்துப் படிக்குமாறு வேண்டுகிறோம்)

மாநாட்டு வரவேற்புக் குழு

சுந்தர ராமலிங்கம், சிவாசாரியார், ஞானியார் மடம், திருக்கோவிலூர்

தங்க.பழமலை, தலைவர்,திருக்குறள் கழக அறக்கட்டளை, திருக்கோவிலூர்

'நல்லாசிரியர்' புலவர். **ந. தேசிகன்**, திருக்கோவிலூர்

தி. சிநி. தியாகராசன், தலைவர், பண்பாட்டுக்கழகம், திருக்கோவிலூர்

சு. எத்துராசன், செயலர், பண்பாட்டுக்கழகம், திருக்கோவிலூர்

கவிமாமணி **சி. உதியன்**, தலைவர், தமிழ்ச்சங்கம், திருக்கோவிலூர்

வ.கண்ணபிரான், எஸ்.எஸ்.வி.அரிசி ஆலை, அரகண்டநல்லூர்

இர. மாணிக்க வாசகன், கண்டாச்சிபுரம்

பேராசிரியர் **தே.இரா. ஜெயராமன்**, சென்னை

பேராசிரியர் முனைவர் **அ. நாகலிங்கம்**, சென்னை

முதல் நாள் நிகழ்ச்சிகள் 12.6.2004 சனிக்கிழமை

காலை

5.30 – 6.30 சிவபூசை

நடத்துனர் : 'சைவத் தமிழ்மணி' ந. ஒளியரசு
மேனாள் செயலர், பெருமன்றம், சென்னை

பங்கேற்போர் : **பெருமன்றம் & திருக்கோவிலூர்ச் சிவனடியார்கள்**

6.30 – 8.00 மணி

அருள்மிகு வெள்ளை விநாயகர் ஆலய வழிபாடு:–
திருமுறை முழக்கத்துடனும், தமிழ் வேதங்கள் & சித்தாந்த சாத்திரங்களுடனும் திருவீதியுலா

தொடங்கிவைப்பவர் : வ. தணுசு, தலைவர், அருணகிரி நாதர் விழாக்குழு, திருவண்ணாமலை.

நெறிப்படுத்துவோர் : இரா. பத்மநாபன், காவல்துறை, திருக்கோவிலூர்
சு. சாமிதாஸ், திருக்கோவிலூர்

8.00 – 8.30 மணி விழா அரங்கில் விடைக்கொடி ஏற்றல்

ஏற்றுபவர் : சுந்தர ராமலிங்கம் சிவாசாரியார் ஞானியார் சுவாமிகள் மடம்

கொடிக் கவி
இசைப்பவர் : பேராசிரியர் முனைவர் அ. நாகலிங்கம்

தொடக்க விழா

காலை 8.55 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை

திருவிளக்கு ஏற்றுபவர் : கலையரசி நாகலிங்கம்

இறைவணக்கம் : வே.க. ஆறுமுகம், கண்டாச்சிபுரம்

தலைமை : பாம்பனார் – வாரியார் அடிப்பொடி, 'சித்தாந்த ரத்தினம்' செ.வே. சதாநந்தன், தலைவர், பெருமன்றம், சென்னை

முன்னிலை : காந்தி முதலியார், தொழிலதிபர், திருக்கோவிலூர்

வரவேற்புரை : பேராசிரியர் தே.இரா. ஜெயராமன்
முருகு. இராமலிங்கம், துணைத் தலைவர், பெருமன்றம்

அருளாளர்களின் திருவுருவப் படத்திறப்பு :

படத்திறப்பாளர் : சமயக் குரவர் 'நல்லாசிரியர்' புலவர் சொ. இராமகிருஷ்ணன், வீரப்பாண்டி

சிவ சீலர்களைச் சிறப்பித்தல் : சந்தானக் குரவர் சு. தயானந்தன், திருக்கோவிலூர்
ச. சொக்கலிங்கம், தடுத்தாட்கொண்டவூர்
பேராசிரியர் இல. வைத்தியலிங்கம் – ஆயந்தூர்
சுவாமி சக்திவேலன், மணம் பூண்டி
தி. துரை. பாலசுப்பிரமணியம், திருவெண்ணெய் நல்லூர்
தி.சி. பாலசுப்பிரமணிய ரெட்டியார், ”
வ. தணுசு, திருவண்ணாமலை
ல. விசுவநாதன், வேட்டவலம்
இர. மாணிக்கவாசகன், கண்டாச்சிபுரம்
ஆனந்த சபேசன், அரகண்ட நல்லூர்
ஆர். அரிஹரன், திருக்கோவிலூர்
ஜெ.முருகன், திருக்கோவிலூர்.
ஆசைத் தம்பி, திருவண்ணாமலை
துரை இராம மூர்த்தி, அரகண்ட நல்லூர்

தவத்திரு ஞானியாரடிகள் 125 ஆம் பெருமங்கல விழா

நினைவு 'சித்தாந்த சரபம்' விருதளிப்பு

திருப்பாதிரிப்புலியூர் தவத்திரு. ஞானியார் அடிகளின் 125ஆம் பெருமங்கல விழா நினைவாக (1997) சைவ சித்தாந்தத் தத்துவ ஞானம் பெற்றவராய், ஒழுக்க சீலராய், ஆராய்ச்சியாளராய், சைவத் தொண்டாற்றும் பெருந்தகை ஒருவருக்குச் **'சித்தாந்த சரபம்'** எனும் விருதினைச் சைவ சித்தாந்தப் பெருமன்றம் ஆண்டு தோறும் மாநாட்டு விழாவில் வழங்கிவருகிறது.

சிறப்புமிக்க **'சித்தாந்த சரபம்'** விருதினை 2003 ஆம் ஆண்டிற்காக, சிவத்தமிழ்ச் செல்வர் முனைவர் **ஆ. ஆனந்தராசன்** சைவ சித்தாந்தத்துறைப் பேராசிரியர் (பணி நிறைவு) மதுரை – காமராசர் பல்கலைக்கழகம்) அவர்களுக்குப் பெருமன்றம் அளித்துச் சிறப்பிக்கின்றது.

விருது பெறுபவரைப் பற்றிய அறிமுகவுரை : பேராசிரியை முனைவர் (திருமதி) **வெ.கனகசுந்தரம்** துணைத் தலைவர், பெருமன்றம்

பாராட்டுரை : சித்தாந்த சரபம் பேராசிரியர் முனைவர் **வை. இரத்தின சபாபதி,** ஆசிரியர், சித்தாந்தம்

"சிவநெறிச் செம்மல்" பட்டமளிப்பு

பட்டம் பெறுபவர் : **சு. மீனாட்சி சுந்தரம்,** நிறுவனர், சுப்பராய முதலியார் நினைவு அறக்கட்டளை, சைவர் மாநாடு, பெருமன்றம்

அறிமுகவுரை : **பெ.மு. கந்தசாமி,** கண்டாச்சிபுரம்

பாராட்டுரை : **தங்க. பழமலை**

விருதையும், பட்டத்தையும் அளித்து அருள் வாழ்த்து அளிப்பவர் திருக்கோவலூர் ஆதீனம் தவத்திரு. **சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்,** தவத்திரு. ஞானியார் மடம், திருப்பாதிரிப்புலியூர்

ஏற்புரை : **முனைவர் ஆ. ஆனந்தராசன்**
சு. மீனாட்சி சுந்தரம்

நூல்கள் வெளியீடு

1. தேவிகாலோத்தர ஆகமம்

வெளியிடுபவர் : **க. அ. சிவஞானம்,** செயற்குழு உறுப்பினர், பெருமன்றம்

பெறுபவர் : **கோ. நாகநாதன்,** செயற்குழு உறுப்பினர், பெருமன்றம்
: **க. கிருசுணன்,** பொருளாளர், பெருமன்றம்

அறிமுகவுரை : சித்தாந்த சரபம் பேராசிரியர் முனைவர் **வை. இரத்தினசபாபதி**

௨. சீர்மிகு திருக்கோவலூர்

நூலாசிரியர் : பேராசிரியர் தே.இரா. ஜெயராமன்

வெளியிடுபவர் : ஆ. பரிசன், ஒட்டம்பட்டு

பெறுபவர் : சொ. சிதம்பரம், கோட்ட மருதூர்

அறிமுகஉரை : கவிஞர் பெண்ணை வளவன், செயலர், திருக்குறள் கழக அறக்கட்டளை

௩. வீரட்டன் அந்தாதி

நூலாசிரியர் : கவிமாமணி சி. உதியன்

வெளியிடுபவர் : முனைவர். அ. நாகலிங்கம்

பெறுபவர் : காந்தி முதலியார், திருக்கோவிலூர்.

அறிமுகவுரை : நல்லாசிரியர் புலவர் ந. தேசிகன்

ஆண்டறிக்கை : சி. கிருஷ்ணமூர்த்தி, பொதுச் செயலாளர், பெருமன்றம்

நன்றியுரை : மு. செல்வராஜ், செயலாளர் (கடிதப் போக்குவரத்து), பெருமன்றம்

உணவு இடைவேளை

சைவர் மாநாடு

பிற்பகல் 2.30 – 6.00 மணி

இறைவணக்கம் : ஓதுவார் நெய்வேலி டி.வி. ஐயப்பன், பண்ருட்டி

தலைமை : முனைவர் ஆ. ஆனந்தராசன்

முன்னிலை : எஸ். சிவராஜ், சட்ட மன்ற உறுப்பினர், திருக்கோவிலூர்

வரவேற்புரை : முனைவர் அ. நாகலிங்கம்

சொற்பொழிவுகள்

1. தலைப்பு : திருக்குறட் குமரேச வெண்பா

உரையாற்றுபவர் சித்தாந்த சரபம் பேராசிரியர் முனைவர் வை. இரத்தின சபாபதி, ஆசிரியர் 'சித்தாந்தம்'

2. தலைப்பு : சேக்கிழார் வாக்கில் சைவ சித்தாந்தம்.

உரையாற்றுபவர் : முனைவர் மு. அருணகிரி, முதல்வர், தியாகராசர் கல்லூரி, மதுரை

3. தலைப்பு : அழகரடிகளும் சிவத்தொண்டும்

உரையாற்றுபவர் : நு. மகாலிங்கம், அமைப்பாளர், தொண்டமான் சக்கரவர்த்தி சோமவார வழிபாட்டுக் குழு, திருமுல்லைவாயில்

நன்றியுரை : வானம்பாடி முருக ஏழுமலை, செயலாளர் (சொற்பொழிவு), பெருமன்றம்.

திருமுறை இசையரங்கம்

இரவு 6.30 – 8.00 மணி

அறிமுகவுரை : பொன். வெங்கட்ராமன், கீழையூர்

திருமுறை இன்னிசை பேராசிரியர் மா. வைத்தியலிங்கம்
மற்றும்
பெரும்பாணநம்பி மா. கோடிலிங்கம் குழுவினர்

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் 13.6.2004 ஞாயிற்றுக்கிழமை

காலை 5.30 மணி : சிவபூசை

நடத்துனர் : சைவத்தமிழ்மணி ந. ஒளியரசு

பங்கேற்போர் : பெருமன்றம் & திருக்கோவிலூர்ச் சிவனடியார்கள்.

6.30 மணி : சிவதீக்கை வழங்குதல் சைவத் தமிழ்மணி ந. ஒளியரசு

7.30 – 8.30 மணி : அருள்மிகு வீரட்டேசுவரர் திருக்கோயில் வழிபாடு

சைவ மங்கையர் மாநாடு

காலை 9.00 – 12.30 மணி

இறைவணக்கம் : ப. ரேணுகா, பெருமன்றம், சென்னை

தலைமை : சித்தாந்த நன்மணி & சித்தாந்த கலாநிதி, பேராசிரியை முனைவர் (திருமதி) கோமதி சூரியமூர்த்தி, மதுரை

வரவேற்புரை : பேராசிரியை முனைவர் திருமதி. வெ.கனகசுந்தரம், துணைத் தலைவர், பெருமன்றம்

சொற்பொழிவுகள்

1. தலைப்பு : சித்தாந்தமும் மங்கையரும்

உரையாற்றுபவர் : சித்தாந்த வித்யா நிதி முனைவர் (திருமதி) எம். ஞானப் பூங்கோதை, மதுரை

2. தலைப்பு : திருக்கோவிலூர் நாயன்மார்கள்
உரையாற்றுபவர் : திருமதி சரோஜா மாதவன், திருக்கோவிலூர்

3. தலைப்பு : சைவ சமயம் ஒரு வாழ்வியல் நெறி
உரையாற்றுபவர் : திருமதி மதி வேலாயுதம், தூத்துக்குடி

நன்றியுரை : பேராசிரியை செல்வி மு.இரகுபாய், பெருமன்றம்

உணவு இடைவேளை

பிற்பகல் 1.30–2.30 மணி : கலந்துரையாடல்
சைவ சித்தாந்தக் கொள்கையைப் பரப்புதல்

சைவ இளைஞர் மாநாடு

பிற்பகல் 2.30 – இரவு 7.00 மணி

இறைவணக்கம் : இரா. இரவிச்சந்திரன், ஓதுவார், கோவல் வீரட்டானம்

தலைமை : முனைவர் செ.ஈ. சூரியமூர்த்தி, மதுரை

முன்னிலை : ஏ. ஆதிசங்கர், கடலூர் நாடாளுமன்ற மேனாள் உறுப்பினர்

வரவேற்புரை : தி. சீநி. தியாகராசன்

சொற்பொழிவுகள்

1. தலைப்பு : திருப்புகழில் சைவ சித்தாந்தம்

உரையாற்றுபவர் : திருப்புகழ் அமுதனார் முனைவர் சு. திருநாவுக்கரசு, முதல்வர், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம்

2. தலைப்பு : நன்னெறி
உரையாற்றுபவர் : சு. குஞ்சிதபாதம், ஆதீனப் புலவர், திருவாவடுதுறை

3. தலைப்பு : தமிழர் வேதம், வேதாந்த சித்தாந்தம்
உரையாற்றுபவர் : பேராசிரியர் முனைவர் சிவ. மாதவன், புதுவை

நிறைவு விழாவும், மாநாட்டு வரவேற்புக் குழுவினர்க்குப் பாராட்டுதலும்

பாம்பனார் – வாரியார் அடிப்பொடி சித்தாந்த ரத்தினம் செ.வே.சதாநந்தன், தலைவர், பெருமன்றம்

நன்றியுரை : பேராசிரியர் தே.இரா. ஜெயராமன்
இறை வாழ்த்து : 'வானம்பாடி' முருக. ஏழுமலை
செயலாளர் (சொற்பொழிவுகள்), பெருமன்றம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

திருச்சிற்றம்பலம்

பெருமன்றம் ஆண்டு விழா மாநாடு அறக்கட்டளைகள்

விருது பதக்கம் அறக்கட்டளை

திரு. இ.பி. திருபுரசுந்தரம் நிறுவிய, பெற்றோர்கள் விழுப்புரம் பார்த்தசாரதி, இந்திராணி அம்மாள் நினைவு அறக்கட்டளை

சைவர் மாநாடு

1. சென்னை புரசைவாக்கம் திரு. அண்ணாமலை பழநியப்பன் நிறுவிய, பாட்டியார் கரூர் அ. அங்கம்மாள், பெற்றோர்கள் அண்ணாமலை முதலியார், மாரி ஆயி நினைவு அறக்கட்டளை
2. கண்டாச்சிபுரம் திரு. மீனாட்சி சுந்தரம் நிறுவிய தந்தையார் சுப்பராய முதலியார் நினைவு அறக்கட்டளை
3. வேலூர் திரு.வி. ஆர். அண்ணாமலை முதலியார் நினைவு அறக்கட்டளை
4. சென்னை இராயப்பேட்டை திரு.சி.எஸ். கோபால கிருஷ்ணன் நிறுவிய, தந்தை தாமோதர முதலியார் நினைவு அறக்கட்டளை
5. சென்னை, தியாகராயநகர், திரு. ஜெயராமன் நிறுவிய அறக்கட்டளை
6. சென்னை அசோக் நகர், திரு.சி. கணேசன் நிறுவிய அறக்கட்டளை
7. வேலூர் திரு.வி. என். இராமதுரை நிறுவிய இராமதுரை கோதாவரி அறக்கட்டளை
8. தர்மபுரி திரு. ஆ. குணசீலன் நிறுவிய எம்.ஆர்.ஏ. இராமலிங்க செட்டியார் நினைவு அறக்கட்டளை

சிவதீக்கை வழங்குதல்

சென்னை திரு. வி.பி. ஜகந்நாதன் தம்பதியர் நிறுவிய அறக்கட்டளை

சைவ மங்கையர் மாநாடு

1. சென்னை பழவந்தாங்கல் திரு. ஆர். நடராசன் நிறுவிய திருமதி இராஜசுந்தரி நினைவு அறக்கட்டளை
2. சென்னை மயிலை பேராசிரியை செல்வி இரகுபாய் நிறுவிய தவத்திரு. நாகமணி சுவாமிகள் நினைவு அறக்கட்டளை.
3. சென்னை நுங்கம்பாக்கம் திருமதி கமலா கணேசன் நிறுவிய அறக்கட்டளை
4. மோட்சகுளம் திரு. கு. மா. வைத்தியநாதன் நிறுவிய திருமதி. வேதவல்லி அம்மையார் நினைவு அறக்கட்டளை

சைவ இளைஞர் மாநாடு

1. சென்னை திரு. ஆ. திருவாசகனார் நிறுவிய பெரிய தந்தை ஆ. இராமய்யா, தந்தை ஆ. ஆறுமுகம் சிறிய தந்தை ஆ. முத்தைய்யா நினைவு அறக்கட்டளை
2. தஞ்சை அமரர் யு. சுப்பிரமணியம் நிறுவிய அறக்கட்டளை
3. சென்னை கீழ்ப்பாக்கம் திரு. நா. சுந்தரமூர்த்தி நிறுவிய ச.ந. நாராயணசாமி முத்துவிழா நினைவு அறக்கட்டளை
4. காளியாபுரம் திரு. லோகநாதன் நிறுவிய அறக்கட்டளை
5. சென்னை இராயப்பேட்டை திருமதி சரசுவதி சிவம் நிறுவிய பெற்றோர்கள் சி. திருமூர்த்தி முதலியார் விஜயலட்சுமி நினைவு அறக்கட்டளை
6. சென்னை நுங்கம்பாக்கம் திரு.சி. கணேசன் நிறுவிய அறக்கட்டளை

98ஆம் ஆண்டு விழா மாநாட்டில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் கவனத்திற்கு :

1. மாநாட்டில் பங்கு கொள்ளும் பெருமன்ற உறுப்பினர்களுக்கு உணவு, உறையுள் வசதி செய்து தரப்படும்.

2. மாநாட்டில் கலந்து கொள்ளும் பெருமன்ற உறுப்பினர்கள் தங்கள் வருகை பற்றிக் குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னதாகவாவது தகவல் கொடுத்து, தெரிவிக்க வேண்டிய முகவரி :

   கவிமாமணி சி. உதியன், 14, முதன்மைச்சாலை, கீழையூர் அஞ்சல், திருக்கோவிலூர் – 605 757 தொலைபேசி : 04153 – 253169

3. மாநாட்டில் சிவபூசை செய்ய விரும்புவோர் மேற்கண்ட முகவரிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாகத் தெரிவிக்கவேண்டும்.

4. மாநாட்டில் சிவ தீக்கை செய்து கொள்ள விரும்புவோர் சைவத் தமிழ்மணி ந. ஒளியரசு அவர்களுக்கு மாநாட்டின் முதல் நாளே தெரிவிக்கவும்.

5. பெருமன்ற வெளியீடுகள் மாநாட்டில் அடக்க விலைக்குக் கிடைக்கும்.

6. பெருமன்ற உறுப்பினராகச் சேர விரும்புவோர் விண்ணப்பத்தாளைப் பூர்த்தி செய்து உரிய தொகையை மன்றப் பொருளாளரிடம் செலுத்தி, பற்றுச் சீட்டு பெற்றுக் கொள்ளவும்.

   ஆண்டு உறுப்பினர் கட்டணம் ரூ. 100/– (சனவரி முதல் திசம்பர் வரை)

   ஆயுள் உறுப்பினர் கட்டணம் ரூ. 1000/–

   உறுப்பினர்களுக்குச் சித்தாந்தம் இதழ் மாதந் தோறும் அனுப்பிவைக்கப்படும்.

7. பெருமன்றம் வெளியிடும் 'சைவ சித்தாந்தா' எனும் ஆங்கில முத்திங்கள் இதழ் பெற விரும்புவோர், ஆண்டுக் கட்டணம் ரூ. 50/–, ஆயுள் கட்டணம் ரூ. 500/– செலுத்திச் சந்தாதாரராகச் சேரலாம்.

8. பெருமன்ற நூற்றாண்டு விழா நிதி, பொது நிதி, கட்டிட நிதி, ஆண்டுவிழா நிதி, அறக்கட்டளை நிதி, சித்தாந்தம் வளர்ச்சி நிதி முதலியவைகளுக்கு அறக்கொடைகள் வழங்க விரும்புவோர் மாநாட்டில் பெருமன்றப் பொருளாளரிடம் செலுத்தி, பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

2004 சூன் திங்களில் நடைபெறஇருக்கும் பெருமன்ற நிகழ்ச்சிகள் (பெருமன்ற வளாகம்)

வ. எண்.	தேதி / கிழமை	அறக்கட்டளை விழா	சொற்பொழிவாளர்	பொருள்
1.	4.6.2004 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி	திருஞான சம்பந்தர் குருபூசை விழா	முனைவர் வை. இரத்தினசபாபதி	தவமுதல்வர்
2.	19.6.04 சனிக்கிழமை மாலை 4 மணி	மாணிக்கவாசகர் குரு பூசை விழா திருமுறை இசை திருமதி வள்ளி	திரு. திருவாசகனார் புலவர். வேலாயுதனார் திருவாசகத்தில் பக்தி எழுச்சி	தலைமை உறை
3.	26.6.2004 சனிக்கிழமை மாலை 6 மணி	திருமுறை விண்ணப்பம் நாயன்மார் வழிபாட்டு விழா	பெருமன்ற அன்பர்கள்	மூன்றாந்திருமுறை ஓதுதல் நாயன்மார்கள் வழிபாடு
4.	வியாழன்	திருமந்திரம்	முனைவர் வை. இரத்தினசபாபதி	
5.	வெள்ளி மாலை 6 மணி	உண்மை விளக்கம்	முனைவர் வை. இரத்தினசபாபதி	

செ.வே. சதாநந்தன்
தலைவர்

சி. கிருஷ்ணமூர்த்தி
பொதுச் செயலாளர்

முருக ஏழுமலை
செயலர்/சொற்பொழிவு

Registered with Registrar of Newspapers for India No. 1465
REGD. News Paper Posted at Egmore RMS Pattrikai Channel
Regd. No. TN/PMG (CCR) 697/04-05 and W.P.P. No. 443 2003-2005

601 Thiru C.N. Thirunavukkarasu, Appar Anbuham
19, Kanna Pillai Street, 7/2 Church 4th Street
Karaikudi. 623 001.
630002.. T. T. Nagar

DATE OF POSTING 31.5.2004

If not Delivered Please return to Sender
SAIVA SIDDHANTHA PERUMANRAM
4, Venkatesa Agraharam Road, Mylapore, Chennai - 600 004.

POSTED UNDER PERMIT NO. MA.EC. 16/1981 of RBI

2004 சூன், திங்கள் சிறப்பு நாள்கள்

4.6.2004	திருஞானசம்பந்தர்
	திருநீலநக்கர்
	திருநீலகண்ட யாழ்ப்பாணர்
14.6.2004	கழற்சிங்கர்
19.6.2004	திருவாதிரைத் திருநாள்
23.6.2004	மாணிக்கவாசகர்
24.6.2004	அமர்நீதி

குறிப்பு : சூன் திங்களில் வரும் நாயன்மார்களின் குருபூசை விழா 26-6-2004 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு மன்ற அலுவலகத்தில் நடைபெறும். அன்பர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம். – *செயலர்.*

Published by C.V. Sadanandan, President on behalf of
Saiva Siddhantha Perumanram from
4 (First Floor), Venkatesa Agraharam Street, Mylapore, Chennai - 600 004.
Printed by V.R. Mayura Priya, printed at Sri Kailash Printers,
32, Bangaru Naicken Street, Chennai - 600 002 and
Editor Dr. Professor V. Rathina Sabapathy.